14.5.2023

**ஊடக வெளியீடு**

Ir. பத்மநாதன் K.

தலைமை நிர்வாக அதிகாரி

PBA ஹொல்டிங் பெர்ஹாட் மற்றும் PBAPP.

**PBAPP சுங்கை மூடாவில் ஏற்பட்ட திடீர் விபத்துக்கு அவசரகால நடவடிக்கையைத் தொடங்குகிறது**

பினாங்கு, ஞாயிறு, 14.5.2023:

- இன்று அதிகாலை சுமார் 5.00 மணியளவில், சுங்கை மூடாவில் அறியப்படாத விபத்து ஏற்பட்டது. கெடாவில் உள்ள சுங்கை மூடாவில் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம். இதனால், PBAPP இன் லஹர் தியாங்கில் எடுக்கப்படும் மூல நீரின், நீர்மட்டம் 1.0 மீட்டருக்குக் கீழே குறைந்தது. பொதுவாக, அதன் நீர்மட்டம் 2.0 மீட்டருக்கு மேல் இருக்கும்.

- இந்த சம்பவத்தின் காரணமாக, சுங்கை மூடாவிலிருந்து PBAPP மூல நீரை எடுக்க முடியவில்லை. இந்த நதி பினாங்கின் முதன்மையான நீர் ஆதாரமாகும். PBAPP சுத்திகரிக்கப்பட்ட நீரை உற்பத்தி செய்வதற்காக தினசரி சேகரிக்கும் நீரில் 80%க்கும் அதிகமானவை சுங்கை மூடாவிலிருந்து எடுக்கப்படுகிறது.

- சுங்கை மூடாவிலிருந்து எடுக்கப்படும் மூல நீர் சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு ஆலைக்கு(WTP) அனுப்பப்படுகிறது. சுங்கை டுவா WTP பினாங்கின் மிகப்பெரிய மற்றும் மிக முக்கியமான WTP ஆகும். அதன் சுத்திகரிக்கப்பட்ட நீர் செபராங் பிறை முழுவதும் மற்றும் பினாங்கு தீவின் தெற்குப் பகுதிகளுக்கும் விநியோகிக்கப்படுகிறது.

- இன்று காலை சுங்கை மூடாவில் நடந்த இந்த திடீர் சம்பவத்தின் காரணமாக, சுங்கை டுவா WTP அதன் "பொது" அளவான ஒரு நாளைக்கு சுமார் 1,000 மில்லியன் லிட்டர் (MLD) சுத்திகரிக்கப்பட்ட நீரை உற்பத்தி செய்ய முடியாமல் போனது.

- சுங்கை டுவா WTP ஆலையில் நீர் உற்பத்தியை ஆதரிக்க, விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணையிலிருந்து (EMD) PBAPP நீரை எடுக்கிறது. இருப்பினும், இந்த அணையில் இருந்து 300 MLD நீர் மட்டுமே பெற வரையறுக்கப்பட்டுள்ளது, இது சுங்கை மூடாவின் பற்றாக்குறையை ஈடுசெய்ய போதுமானது அல்ல.

- PBAPP லஹார் தியாங்கில் 100% மூல நீர் எடுக்கும் செயல்பாடுகளை மீண்டும் தொடங்கும் வரை, தற்போதைய சூழ்நிலையில் சுங்கை டுவா WTP இல் 600 MLD - 650 MLD சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தி மட்டுமே செயல்படுத்த முடியும். இதற்கான "தீர்வு" எப்போது நடக்கும் என்று எங்களுக்குத் தெரியாது.

- இன்று சுங்கை மூடா வடிநில நிர்வாகம்(PLSM) , தேசிய நீர் சேவை ஆணையம் (SPAN) மற்றும் பினாங்கு நீர் விநியோக கட்டுப்பாட்டு வாரியம்(BKSA) ஆகிய நிறுவனங்களின் கீழ் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- இந்தச் சம்பவம் இப்போது வட செபராங் பிறை (SPU), மத்திய செபராங் பிறை (SPT), தென் செபராங் பிறை (SPS) மற்றும் பினாங்கு தீவின் தெற்குப் பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான பினாங்கு நீர்ப் பயனீட்டாளர்களின் நீர் விநியோகத்தைப் பாதிக்கிறது.

- பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள சில பயனீட்டாளர் இன்று (14.5.2023) முதல் புதன்கிழமை (17.5.2023) வரை "குறைந்த நீர் அழுத்தம்" அல்லது "நீர் விநியோகம் தடை" எதிர்நோக்குகின்றனர்.

Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
Meeting all your water supply needs

இன்னும் நீர் விநியோகம் பெறப்படும் பயனீட்டாளர்கள் அடுத்த சில நாட்களுக்குப் பயன்படுத்த நீரை சேமித்து வைக்க வேண்டும்.

- PBAPP பொறியியல் குழுவினர் லாஹர் தியாங் ஆற்றில் இருந்து மூல நீர் பெறும் செயல்பாடுகளையும் சுங்கை டுவா WTP இல் நீர் உற்பத்தி செயல்பாடுகளையும் மேம்படுத்த 24 மணி நேரமும் உழைத்து வருகின்றனர்.பினாங்கில் உள்ள பல பயனீட்டாளர்களுக்கு முடிந்தவரை நீர் விநியோகத்தை வழங்குவோம்.

- இருப்பினும், பினாங்கில் நீர் விநியோக சேவையை அனைத்து பயனீட்டாளருக்கும் முழுமையாக வழங்கவும், வழக்க நிலைக்கு எப்பொழுது மாறும் என்பதை எங்களால் உறுதியாகக் கூற முடியாது, ஏனெனில் சுங்கை மூடா நதியின் நீர்மட்டம் எப்போது 2.0 மீ அல்லது அதற்கும் அதிகமாக மீட்டெடுக்கப்படும் என்பது எங்களுக்குத் தெரியாது.

- எங்களிடம் கூடுதல் தரவு மற்றும் தகவல்கள் கிடைக்கப்பெற்றால், பினாங்கு மாநில அரசாங்கத்திற்கும், பொது மக்களுக்கும் இந்த தகவலை செய்தி ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் அறிவிப்போம்.

- PBAPP பினாங்கு மக்களின் அன்பானப் புரிதலையும் ஆதரவையும் நாடுகிறது. இச்சூழ்நிலை எதிர்பாராத சம்பவத்தினால் ஏற்பட்டது. இந்தச் சம்பவம் பினாங்கில் நிகழவில்லை. இருப்பினும், PBAPP பினாங்கில் இதன் தாக்கங்களை நிவர்த்திச் செய்ய தன்னால் முடிந்த அனைத்தையும் செய்து வருகிறது.

நன்றி.

---

Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)

Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*


எழுத்தாக்கம் : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah

கார்ப்பரேட் தகவல் பிரிவு

தொலைப்பேசி : 04-200 6606

மின்னஞ்சல் : syarifah@pba.com.my

PBA

Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)

Memenuhi segala keperluan bekalan air anda

*Meeting all your water supply needs*